2023 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

45 மில்லியன் கன அடியில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற செய்தியும் வந்திருக்கிறது. இதன் காரணமாக பில்லூர் அணைக்கு வரும் நீரின் அளவும் குறையும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதால், அதிகாரிகள் அங்கு சென்று வந்து எனக்கு report *தந்த பிறகு, கேரள அரசோடு இதுகுறித்து பேச்சுவார்த்தை நடத்துவோம் அல்லது அதிகாரிகள் சென்று பேசுவார்கள் அல்லது நானே சென்று பேசிவிட்டு வருவேன்.*

முற்பகல் 10–10

(ஈ) சென்னை-பெங்களூரு சாலை-ஒரகடம் பகுதியில் பாலம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பெங்களூருக்கு 5 மணி நேரத்தில் செல்வதற்கு நம்மிடத்தில் சாலை வசதி இருக்கிறது. ஆனால், ஸ்ரீபெரும்புதூர்* junction *வரும்போது ஏறக்குறைய 40 நிமிட நேரம் வீணடிக்கப்படுகிறது. காரணம் என்னவென்றால், அங்கே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளின் கனரக வாகனங்கள், இலகுரக வாகனங்கள் அனைத்தும் செல்வதால், அங்கு ஒரு மணி நேரம் நின்று செல்லவேண்டிய அளவிற்கு மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதுகுறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் பலமுறை சொல்லியிருக்கிறேன். அவர் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துவிட்டேன், போதும். நேரமில்லை.* please. *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் இருந்தால், சொல்லுங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கு இன்று பிறந்தநாள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக அவருக்கு வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. எ.வ. வேலு] [2023 ஏப்ரல் 21

உறுப்பினர் கேட்கின்ற அந்தச் சாலை, மாநில நெடுஞ்சாலை சம்பந்தப்பட்டது அல்ல. குறிப்பாக, இது முழுக்க முழுக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் போடப்படுகின்ற சாலை, ஒன்று. இன்னொன்று, பக்கத்தில் ஒரகடம் போகின்ற சாலையானது, மாநில அரசாங்கத்தின் சாலை. எனவே, இப்போது வெளிவட்ட சாலை ஒன்று புதிதாக போடுவதற்காக திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டு, உலக வங்கியின் நிதியுதவியோடு போடப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, ஒரகடம் பகுதியில் மாநில அரசின் சார்பாக நீங்கள் கேட்கின்ற பாலம் அமைக்கப்படும்.

(இ) சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவது குறித்து–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, சற்றுமுன் வந்த செய்தி. 60 மில்லியன் கன அடியிலிருந்து 70 மில்லியன் கன அடி வரைக்கும் தண்ணீரைத் தேக்கக்கூடிய அளவிற்கு கட்டியிருக்கிறார்கள். இதுகுறித்து நம்முடைய அதிகாரிகள் ஆய்வு செய்திருக்கிறார்கள். கேரள அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். எனவே, இரண்டு மாநிலங்களையும் கூட்டு கள ஆய்வு செய்து, பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள்.*

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்–இரண்டாகப் பிரித்தல், உரிய நேரத்தில் கலந்தாய்வு நடத்துதல் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர், உறுப்பினர் அவர்கள் வேளாண் கல்லூரியில் பணியிடங்கள் காலியாக உள்ளதென்று கூறினார்கள். கடந்த 2014–ல்*